**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண்.271/2022**

2024–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் செவ்வாய் கிழமை வா.சா.1. (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.புவனேஸ்வரி, மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜவள்ளி | சமயம் | : |
| க/பெ | : வேல்முருகன் | வயது | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | மாவட்டம் | : |

---

**<u>வா.சா. 1–ன் முதல் விசாரணை</u>**

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் முதல் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். 01.03.1989 தேதியில் தாவா சொத்தைப் பொறுத்து எங்கள் தந்தைக்கு கிருஷ்ணசாமி என்பவர் எழுதி கொடுத்த அடமான கடன் பத்திரம் **வா.சா.ஆ.1** ஆகவும், 07.07.1989 தேதியில் எங்கள் தந்தை ராஜேந்திரன், எங்களின் தாயார் வீரம்மாளுக்கு எழுதி கொடுத்த பெந்தக made over பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து முதல் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள கணினி பட்டா நகல் (பட்டா எண்.8397) **வா.சா.ஆ.3** ஆகவும், தாவா 3 வது அயிட்ட சொத்தைப் பொறுத்து 2 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள கணினி பட்டா (பட்டா எண்.8400) **வா.சா.ஆ.4** ஆகவும், தாவா 4 வது அயிட்ட சொத்திற்கு 4 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி பட்டா

(பட்டா எண்.8399) **வா.சா.ஆ.5** ஆகவும், தாவா 4 வது அயிட்ட சொத்திற்கு 4 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி பட்டா (பட்டா எண்.339) **வா.சா.ஆ.6** ஆகவும், 12.04.2022 தேதியில் நாங்கள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.7** ஆகவும், மேற்படி சட்ட அறிவிப்பினை 2, 4 பிரதிவாதிகள் பெற்றுகொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.8** ஆகவும், மேற்படி சட்ட அறிவிப்பினை 1, 3 பிரதிவாதிகள் பெற்றுகொள்ளாமல் உரையுடன் திருப்பப்பட்டது **வா.சா.ஆ.9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

ஒப்பம்/−திரு.S.கணேஷ், M.Com., M.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.